7th March 1966]

திரு. ஜே. மாதா கவுடர் : இது சாதாரண மக்களுக்கு ஒரு நல்ல திட்டமாக அமைந்திருக்கக் கூடிய காரணத்தினால் ஒரு முறை டார்ஜெட் எவ்வளவு என்று வைத்துக்கொண்டு வசூல் செய்வதற்குப் பதிலாக வருடம் முழுவதும் இந்தச் சேமிப்புத் திட்டததைத் தீவிரமாக நடத்த சர்க்கார் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குறிப்பிட்ட சில வாரங்களில் தீவிரமாக இது கவனிக்கப்படுகிறது. ஆனால் ஆண்டு பூராவும் வசூலிக்கப்பட்டு வருகிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இந்த வி.டி.டி. திட்டத்தைக் கல்லூரிகளில் ஆரம்பித்தால் சிறு வயது முதலே சேமிப்புப் பழக்கம் மாணவர்களிடையே வளர்வதற்கு உதவியாக இருக்காதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாணவர்களும் அக்கறை கொள்ளும்படி ஏற்பாடு செய்யப்படுகிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்க் கணக்கில் கொடுக்கப்படுகிற வட்டி விகிதம் எவ்வளவு? இந்த சேமிப்புத் திட்ட அடிப்படையில் முதலீடு செய்கிற தொகைக்குக் கொடுக்கப்படுகிற வட்டி விகிதம் எவ்வளவு ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தபாலாபீஸ் சேவிங்ஸ் கணக்கிலும் பணம் போடலாம். அது பழைய திட்டம். இதுவும் அதோடு இணைக்கப்பட்டிருக்கிறது. அதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

புலவர் கா. கோவிந்தன் : பள்ளிகளில் பிள்ளைகளிடத்தில் சேமிப்பு அட்டைகள் கொடுக்கப்படுகின்றன. நான்கணா நான்கணாவாக சேமிப்பு முத்திரைகளை ஒட்டிக் கொண்டு வருகிறார்கள். குழந்தைகள் அந்த முத்திரைகளை ஒட்டுவதற்காக எடுத்துச் செல்லும்போது தொலைந்து போகும் நிலைமை இருக்கிறது. அவ்வாறு தொலைந்து போகாதிருக்க என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் ? 9-00 a.m.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் குறைபாடுகள் எல்லாம் தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிற விஷயம்.

இந்திய மொழிகளுக்குப் பொது லிபி

* 196 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்திய மொழிகளுக்கு ஒரு பொது லிபி நடைமுறைக்கு கொண்டு வருவதுபற்றி மத்திய அரசு நமது மாநில அரசின் அபிப்பிராயம் கேட்டதா ?

(இ) ஆமெனில், நமது சர்க்கார் தெரிவித்த கருத்தென்ன ?

[7th March 1966

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b(Does not arise.

திரு. எம். எஸ். செல்வராஜன் : வெளிநாடுகளில், குறிப்பாக தாய்லந்தில் பொது லிபி முறை இருப்பதாக அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? வெளிநாடுகளில் இந்த முறை எந்த அளவு நடைமுறையில் இருக்கிறது என்று பார்த்து நம்முடைய நாட்டிலும் பொது லிபியைக் கொண்டு வருவது பற்றிப் பரிசீலிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த நாட்டிலே அவரவர்களுடைய தாய் மொழிக்கு என்று இருக்கிற லிபியிலே ஒரு பெருமை இருக்கிறது. அதை மாற்றிப் பொது லிபியாக அமைப்பதைச் சாதாரணமாக மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஆகவே, அவ்வாறு செய்வதாக அரசாங்கத்திற்கு உத்தேசமில்லை. ஆனால் மக்கள் தங்களுடைய தாய்மொழி அல்லாத வேறு ஒரு மொழியைக் கற்றுக் கொள்ளும் அவசியத்தை உணர்ந்து வேறு ஒரு மொழியைக் கற்பதாக இருந்தால் அதை ஒரு பொது லிபி மூலமாகக் கற்றுக் கொள்வது நல்லது என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி : நமது மாநில அரசாங்கத்திடம் இதைப் பற்றிய அபிப்பிராயத்தைக் கேட்டால் எந்த லிபியை ஆதரித்துச் சொல்வார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே கூறினேன். அந்தந்தத் தாய் மொழியைச் சேர்ந்த லிபியை மாற்றுவதாக உத்தேசமில்லை. தாய் மொழி அல்லாத ஒரு மொழியைக் கற்றுக் கொள்வது என்றால், உதாரணமாக தமிழ் நாட்டு மக்கள் இந்தி கற்றுக் கொள்வதாக இருந்தால் அதற்கு ஒரு பொது லிபி இருந்தால் சுலபமாகக் கற்றுக் கொள்ள முடியும். இந்திக்காரர்கள் தமிழ் கற்றுக் கொள்வதாக இருந்தால் அவர்களுக்குத் தெரிந்த லிபியில் அவர்கள் தமிழைக் கற்றுக் கொள்ளலாம். அதல்லாமல் எல்லாவற்றுக்கும் பொது லிபி என்றால் அது விபரீதமாக இருக்கும். தமிழ் நாட்டு மக்கள் தமிழ் மொழியை வேறு ஒரு லிபியில் கற்றுக் கொள்ளும் பேச்சே இல்லை

புலவர் கா. கோவிந்தன் : நமது நாட்டிலே உள்ள அத்தனை மொழிகளுக்கும் ஒரு பொது லிபி இருக்க வேண்டுமென்ற கருத்து பேசப்பட்டு வருகிற நிலையோடு வற்புறுத்தப்பட்டு வரும் நிலைமை இருக்கிறது. தமிழ் எழுத்துக்கள் தமிழின் இலக்கணத் தொடர்புடைய நிலையிலே உள்ளவை. இந்த எழுத்தை மாற்றினால் இலக்கண நயம் கெட்டு விடும். ஆகவே, இந்தச் சர்க்கார் பொது லிபியை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று உறுதியாகக் கூறுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் சிறிது முன்புதான் விளக்கினேன். கனம் அங்கத்தினர் புரிந்து கொள்ளவில்லை என்றால் என்ன செய்வது ?

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.